**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM.**

| | | |
|---|---|---|
| **MCOP No. 392/2024** | **நாள் – 01.07.2026** | **சாட்சி – ம.சா.–2** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சகுந்தலா | கணவர் பெயர் | சின்னப்பன் |
| ஊர் | மேலகஞ்சங்கொல்லை | தாலுக்கா | காட்டு மன்னார்கோவில் |
| தொழில் | இல்லை | வயது | 68 |

**முதல் விசாரணை:**

மனுதாரர் தரப்பு சாட்சி 2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில் விபத்து குறித்து நான் புகார் கொடுத்தேனா என்றால் நான் புகார் கொடுக்கவில்லை. எனது மகன் ராமகிருஷ்ணன் புகார் கொடுத்தார். சம்பவ சமயத்தில் நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்றால் ஆடு, மாடுகளை மேய்த்து கொண்டிருந்தேன். ஆடு, மாடுகளை கட்டி போடவில்லை என்றால் சரிதான். நான் அப்போது எங்கு நின்று கொண்டிருந்தேன் என்றால் சாலையின் ஓரத்தில் புளியமரத்திற்கு அடியில் உட்கார்ந்திருந்தேன். சாலையின் ஓரத்தில் உட்கார்வதும், நிற்பதும் தவறு என்றால் சரிதான். நான் மேய்த்துக்கொண்டிருந்த ஆடு, மாடுகள் சாலைக்கு வர வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நானும் முத்துலெட்சுமியும் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் இருந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

G.Manikandaraja,
Additional Chief Judicial Magistrate,
Kumbakonam.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

**Case No. 76/2018**

**Prosecution Witness – 4**

| | | |
|---|---|---|
| **Name** | : | **திரு. தேவராஜ்** |
| **Father's/Spouse's Name** | : | **திரு. நல்லுசாமி** |
| **Address** | : | **F/2 பரத்வாஜ் அபார்ட்மெண்ட், EVS ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்.** |
| **Calling** | : | **உதவி மின் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் (ஓய்வு)** |
| **Age** | : | **61/2026** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 01.07.2026.**

**Signature of witness,**

A1, A2, A4, A5, A6, A7, A8, A9, A10 are Present.

**CC.No. 76/2018** **PW : 4 (LW–5)** **01.07.2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது F/2 பரத்வாஜ் அபார்ட்மெண்ட், EVS ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் 2017ல் விராலிமலை தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி மின் பொறியாளராக பணிபுரிந்து வந்தபோது விராலிமலையில் சம்பவத்திற்கு முதல் நாள் இரவு தங்கியிருந்தேன். காலையில் 6.30 மணியளவில் நடைபயிற்சி செய்து கொண்டிருந்தபோது பைபாஸ் சாலையில் நானும் எனது நண்பர் வெங்கடாசலமும் பேசிக்கொண்டிருந்தோம்.

திருச்சியிலிருந்து அரசு பேருந்தானது கொண்டமன் நாயக்கன்பட்டி பிரிவு சாலையில் இறங்கியது. மதுரையிலிருந்து வந்த காரானது பேருந்தின் முன்பக்க படிகட்டில் மோதி விபத்து ஏற்பட்டது. பேருந்தில் வந்தவர்களுக்கும் காரில் வந்த 4 நபர்களுக்கும் அடிபட்டது. நாங்கள் ஓடி போய் பார்த்தோம். பக்கத்தில் கொஞ்ச துாரத்தில் பெண் உதவி ஆய்வாளரும், காவலரும் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் ஓடி வந்து பார்த்தார்கள். உதவி ஆய்வாளர் காரில் இருந்தவர்களை வெளியே வருமாறு அழைத்தார்கள். உதவி ஆய்வாளர் காரின் பின்புறம் திறந்து பார்த்தார். அதில் ஒரு பேக் இருந்தது. பேகை திறந்து பார்த்தபொழுது அதில் சிவலிங்கம் இருந்தது. நானும் வெங்கடாசலமும் அங்கு இருந்தோம். உதவி ஆய்வாளர் எங்களை இது குறித்து சாட்சி அளிக்க வேண்டுமென்று சொன்னார். மதியம் துணை கண்காணிப்பாளர் வருவார் அவர் வரும்பொழுது என்னை விசாரணைக்கு வரவேண்டுமென்று சொன்னார். உதவி ஆய்வாளர் மதியம் 3.00 மணிக்கு சம்பவம் நடந்த இடத்திற்கு வருமாறு கூறினார். நானும் வெங்கடாசலமும் சம்பவ இடத்திற்கு மதியம் 2.45 மணிக்கு சென்று விட்டோம். மதியம் 3.00 அல்லது 3.30 மணியளவில் துணை கண்காணிப்பாளர் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தார். துணை கண்காணிப்பாளர் சம்பவ இடத்தில் படம் வரைந்தார். துணை கண்காணிப்பாளர் statement போன்று எழுதினார். அதில் என்னிடம் கையொப்பம் பெற்றார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. பார்வை மகஜர் **அ.சா.ஆ–2** ஆகும். பச்சை கலர் சிவலிங்கத்தை காவல் துறையினர் கைப்பற்றினார்கள். அந்த பஜேரா காரையும் காவல் துறையினர் கைப்பற்றினார்கள். அதில் இரண்டிலும் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். லிங்கம் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ–3.** பஜேரா காரை கைப்பற்றியதற்கான மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. அதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ–4** ஆகும். மேற்கண்ட லிங்கம் மற்றும் காரை

என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். என் முன்னால் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பச்சை கலர் லிங்கம் தான் நான் அந்த காரில் பார்த்த லிங்கம். மேற்கண்ட லிங்கமானது நீதிமன்ற கஸ்டடியில் கும்பகோணம் நாகேஸ்வரன் கோவிலில் உள்ள பாதுகாப்பு மையத்தில் உள்ளதால் புகைப்படத்தை குறியீடு செய்ய அரசு தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மேற்கண்ட லிங்கமானது மரகதலிங்கம் இல்லை என்றும் Green Aventurine கல்லாலான லிங்கம் என்றும் நீதிமன்ற பாதுகாப்பில் இருப்பதால் அதனை குறியீடு செய்ய முடியும் என்றும் ஆகவே புகைப்படத்தை குறியீடு செய்ய கற்றறிந்த எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார். மேற்கண்ட லிங்கமானது பாதுகாப்பு அறையில் இருப்பதால் புகைப்படம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. **சா.பொ. –1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த விபத்தில் சம்பந்தப்பட்ட காரின் நிறம் சாம்பல் நிறமாகும். அந்த காரின் பின்புறத்தில் கட்சியின் பெயர் இருந்தது. சம்பந்தப்பட்ட காரானது ஆய்வாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சொத்து பதிவேட்டில் தெரியவருவதால் நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

**(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

Sd/-G.MANIKANDARAJA
Additional Chief Judicial Magistrate,
Kumbakonam.